# WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம்

மரம் 7 நவம்பர் 1998 கனி 4

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்

B. அர்ஜுனன்

## பொதுவான செய்திகள்

1. ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் அவர்கள் தனது 79வது பிறந்தநாளை 27.10.98 அன்று எளிமையாகக் கொண்டாடினார்.
2. மதுரை மாவட்டம் திருமங்கலம் – மேலக்கோட்டையில் தமிழகத்தின் முதல் சமத்துவபுரத்தை 17.8.98 அன்று முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார்.
3. அமெரிக்காவிலுள்ள கென்னடி விண்வெளி தளத்திலிருந்து 29.10.98 அன்று ஏழு பேருடன் ஜான் கிளென் என்ற 79 வயது நிரம்பிய விண்வெளி பயண அனுபவமுள்ள இவர் அதிக உற்சாகத்துடன் சென்றார்.
4. ஐரோப்பாவிலும் கொடிகட்டி பறக்கிறது ஆயுர்வேதம்.
5. சர்வதேச ஜூனியர் ராங்கிங் டென்னிஸ் போட்டி வரும் டிசம்பர் மாதம் 7ம் தேதி கல்கத்தாவில் துவங்குகிறது.

## அக்டோபர் மாத வேதஅறிவுப் போட்டியின் விடைகள்

1. தாவீது – சங்கீதம் 56:8
2. தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் – நீதிமொழிகள் 11:2
3. தொர்த்துல்லு, பவுலை – அப்போஸ்தலர் 24:5
4. துப்புரவு, உண்மையென்னும் – 1 கொரிந்திர் 5:8
5. தன் கூலிக்குப் – லூக்கா 10:7
6. பாவஞ்செய்தான்
7. பிரசவவேதனை
8. இமெநேயும், பிலேத்தும்
9. தேவனுக்குப்
10. பிலேயாம்

## இதழின் உள்ளே . . .

பத்து புதையல்கள் — பக்கம்


1. ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு.............................. 1
2. பிரசங்கம் எப்படியிருக்க வேண்டும் (சிந்தனைக்கு).... 4
3. மதப்பெயர்களும், பட்டங்களும்.......................................... 5
4. புதிய விருந்தாளி................................................................ 8
5. நவம்பர் மாத வேதஅறிவுப் போட்டி................................ 9
6. மனந்திரும்பிய மைந்தன் (சிறுவர் பகுதி)...................... 10
7. துன்பத்தையும், இன்பத்தையும் கண்ட ஸ்திரீ (பெண்கள் பகுதி). 11
8. Who Am I?........................................................................ 13
9. எவ்வாறு தேவனை ஒழுங்காக ஆராதிப்பது ?............ 13
10. அக்டோபர் மாத வேதஅறிவுப்போட்டியின் விடைகள். உள் அட்டை



Published by

**WORLD LITERATURE PUBLICATIONS**

*POST BOX NO. 5, BATLAGUNDU - 624 202*

**SOUTH INDIA.**

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 7 நவம்பர் 1998 கனி 4


ஆசிரியருரை



## ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு
## Holdingfast the Word of life

நாம் வாழும் இப்பூமியில் இரு கூட்டத்தாரைப் பார்க்க முடிகிறது. ஒருசாரார் ஜீவவசனத்தைப் பிடித்துக் கொள்ளாதவர்கள், மற்றொரு சாரார் ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டவர்கள். இவ்விரு கூட்டத்தாரைப் பற்றியும் பரிசுத்த வேதாகமத்தில் நாம் காணலாம். இவர்களின் முடிவுதான் என்ன? மனிதன் எதையெதையோ பிடித்துக்கொண்டு ஜீவிக்கின்றான். சிலர் பணத்தைப் பிடித்துக்கொண்டு ஜீவிக்கின்றனர், சிலர் உறவைப் பிடித்துக்கொண்டும், சிலர் வெளிநாட்டு சகோதரரைப் பிடித்துக்கொண்டும், சிலர் அழகைப் பிடித்துக்கொண்டும், சிலர் கல்வியறிவைப் பிடித்துக்கொண்டும் ஜீவிக்கின்றனர். மனிதன், பிடிக்கவேண்டிய ஜீவவசனத்தைப் பிடிக்காமல் எதையெதையோ பிடித்துக்கொண்டு ஜீவிக்கின்றான்.

ஜீவவசனத்தைப் பிடித்துக் கொள்ளாதவர்களைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்குக் குறிப்பிடும்போது, "ஒருவன் மல்லயுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான்" (2 தீமோ.2:5). ஒருவன் கிறிஸ்தவனாயிருக்கலாம் அல்லது கிறிஸ்துவைப் பற்றி கேள்விப்பட்டிருக்கலாம். எப்படியிருந்தாலும் அவன் கிறிஸ்துவின் உபதேசத்தின்படி நடக்கிறவனாயிருக்கவேண்டும். அவனே தேவனை உடையவன். வெறும் பெயரளவில் இருந்தால் சட்டத்தின்படி நடக்கிறவனல்ல. ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுகிறவனைப் போலிருப்பான். ஏசாயா தீர்க்கதரிசி இவர்களைக் குறித்துப் பேசும்போது, "மாட்டை வெட்டுகிறவன் மனுஷனைக் கொல்லுகிறவனாகவும், ஆட்டைப் பலியிடுகிறவன் நாயைக் கழுத்தறுக்கிறவனாகவும், காணிக்கையைப் படைக்கிறவன் பன்றி இரத்தத்தைப் படைக்கிறவனாகவும், தூபங்காட்டுகிறவன் விக்கிரகத்தை ஸ்தோத்தரிக்கிறவனாகவும் இருக்கிறான்; இவர்கள் தங்கள் வழிகளையே தெரிந்துகொள்ளுகிறார்கள்; இவர்களுடைய ஆத்துமா தங்கள் அருவருப்புகளின்மேல் விருப்பமாயிருக்கிறது" (ஏசாயா 66:3). இஸ்ரவேல் மக்களில் சிலர் இப்படியாக இருந்தனர்.

ஜீவவசனத்தைப் பிடித்துக்கொள்ளாமல் தங்கள் வழிகளையே தெரிந்துகொள்ளும் கூட்டம் இன்றும் இருந்து கொண்டுதானிருக்கிறது.

தாவீது குறிப்பிடும்போது, "உமது வசனத்தைக் காத்துக் கொள்ளாத துரோகிகளை நான் கண்டபோது எனக்கு அருவருப்பாயிருந்தது" (சங்கீதம் 119:158). வசனத்தைக் காத்துக்கொள்ளாதவர்களை இங்கு அவர் துரோகிகள் என்று கூறுகிறார். சுவிசேஷப் புத்தகங்களில் யூதாஸை துரோகியான யூதாஸ்காரியோத்து என்று வாசிக்கின்றோம். காரணம் ஜீவ வசனத்தைக் காத்துக்கொள்ளாமல், ஜீவவசனத்தைப் போதித்த இயேசுவையே காட்டிக் கொடுத்தான். ஆகையால் அவனை வேதம் துரோகியான யூதாஸ்காரியோத்து என்று கூறுகிறது. அநேகருக்கு ஜெபிக்க ஆசை. விடிய விடிய ஜெபிப்பார்கள். ஆனால் வசனத்தைக் கேட்டால் இருதயம் குத்தப்படும் என்று சொல்லி வசனத்திற்கு செவிகொடுக்க மறுப்பார்கள். இவர்களைப் பற்றி சாலொமோன் நீதிமொழிகளில், "வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது" (நீதி.28:9) என்று சொல்வதை வாசிக்கின்றோம்.

ஜீவவசனத்தைப் பிடித்துக் கொண்டவர்களைக் குறித்து பவுல் குறிப்பிடும்போது, "நான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும் படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லா மலும் செய்யுங்கள்"(பிலிப்பியர் 2:14-16) என்கிறார். உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள் என்று சொல்வதைப் பாருங்கள். ஒரு கிறிஸ்தவன் அல்லது கிறிஸ்தவள் ஆகாய மண்டலத்திலுள்ள ஒரு சுடரைப் போல பிரகாசிக்க வேண்டும். ஆகையால்தான் நமதாண்டவரும் நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் என்றார். தானியேல் குறிப்பிடும்போது, "ஞானவான்கள் ஆகாயமண்டலத்தில் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்" (தானி.12:3) என்கிறார். ஆம் பிரிய நண்பரே, உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடி எச்சரிக்கையாயிரு, "நீங்களெல்லாரும் வெளிச் சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே" (1 தெச.5:5).

பேதுரு இவ்விதமாய் குறிப்பிடுகிறார், "புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே

நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்" (1 பேதுரு 2:12). சாட்சியுள்ள ஜீவியம் இல்லாததால் புறஜாதிகளுக்குள்ளே கிறிஸ்துவின் நாமம் தூஷிக்கப்படுகிறது. ஆகையால் நாம் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே பேதுருவின் ஆலோசனைப்படி நடக்கவேண்டும். மேலும் குற்றமற்ற ஜீவியம் செய்ய வேண்டும். "உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" (1 தெச 5:23). வசனத்தைப் பிடித்துக்கொண்டேன் என்று சொல்லி அதன்படி நடவாதிருந்தால் நாம் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். அதேபோல் "நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும் இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால் சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்" (1 யோவான் 1:6).

பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, "நீ கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு. உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்" (2 தீமோ 1:13,14). இங்கு ஆரோக்கியமான வசனங்களின் சட்டம் என்று குறிப்பிடுகிறார். மேலும் அந்த நற்பொருளை என்று வாசிக்கின்றோம். ஜீவவசனத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதை நாம் காணமுடிகிறது. கர்த்தர் பிலதெல்பியா சபைக்கு எழுதும்போது, "... நீ என் நாமத்தை மறுதலியாமல் என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான் (வெளி 3:8) என்கிறார். என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே என்று வாசிக்கின்றோம். ஆகயார் ஜீவவசனத்தை பிடித்துக்கொண்டு அதன்படி நடக்கிறார்களோ, அவர்களே முடிவுபரியந்தம் நிலைத்திருந்து இரட்சிக்கப்படுவார்கள்.

"ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால் அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 8:51) என்றார். ஒரு மனிதன் ஆண்டவருடைய வார்த்தையைக் கைக்கொள்ளும்போது நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியத்தை அடைகிறான். "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான்" (மத்தேயு 13:23). "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" (மத்தேயு 4:4).

இதை வாசிக்கும் பிரியமான சகோதரனே! சகோதரியே! நீர் எதைப் பிடித்துக்கொண்டிருக்கின்றீர்? ஜீவவசனத்தையா? அல்லது

உலகத்தையா? ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு சுடர்களைப்போல பிரகாசிக்க வேண்டுமே தவிர புத்தியற்ற கன்னிகைகள் கையிலிருந்த அணைந்துபோன விளக்கைப் போலிருக்கக் கூடாது. வசனத்தைப் போதிக்கிற சபைக்குச் சென்று சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும். எப்பொழுதும் வேதவசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (1 யோவான் 1:7). கர்த்தர் தாமே நம்மை வழிநடத்துவாராக!

**செப்டம்பர் மாத இதழின் வேதஅறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் பட்டியலில் விடுபட்டவர்**

C. கனகவள்ளி – குன்னூர்

## சிந்தனைக்கு

### பிரசங்கம் எப்படியிருக்க வேண்டும்

சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ (1 கொரி. 9:16)

- திருவசனத்தைப் பிரசங்கி — 2 தீமோ. 4:2.
- சத்தியத்தைப் பிரசங்கி — யோவான் 8:32.
- அன்புடன் சத்தியத்தைப் பிரசங்கி — எபேசியர் 4:15.
- சுவிசேஷத்தைப் பிரசங்கி — ரோமர் 1:16.
- உலக முழுவதற்கும் பிரசங்கி — மத்தேயு 28:19,20.
- கூட்டாமல் பிரசங்கி — வெளி. 22:18.
- எடுத்துப்போடாமல் பிரசங்கி — வெளி. 22:19.
- சுயமகிமையில்லாமல் பிரசங்கி — 1 கொரி. 9:16.

"சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு" – 2 தீமோ. 4:2.

**அக்டோபர் மாத இதழின் வேதஅறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்**

1. N.டேனியல் தமிழ்வாணன் – மேல்விசாரம்
2. R.ஜெபர்சன் ஜேக்கப் – ஐரேனிபுரம்
3. S.ரேய்ச்சல் அமுதமணி – மேல்விசாரம்
4. R.நோபில் – ஐரேனிபுரம்
5. J.முத்துமீனா – கோவை
6. R.செல்வமணி – கோவை
7. N.நவோமி ஜாய் – குன்னூர்

## RELIGIOUS NAMES AND TITLES
## மதப்பெயர்களும், பட்டங்களும்

மனிதன் தற்பெருமையுள்ளவன். புகழ்ச்சி, கௌரவம், மகிமை ஆகியவற்றை அவன் விரும்புகிறான். பட்டங்களை நேசிக்கிறான். பதவிப் பசியில் அலைகிறான். வெறும் கிறிஸ்தவனாக மட்டும் இருக்க அல்லது கற்பிக்கிறவனாக இருக்க அல்லது தேவன் விரும்புவதுபோல இருப்பது மட்டுமே அவனுக்குப் போதுமானது இல்லை. அவனுடைய தேவை இன்னும் அதிகம். இந்த அடங்காத ஆவலைப் பூர்த்திசெய்ய பெயர்களையும், பழக்கங்களையும், அவன் விருப்பத்திற்கேற்ற பதவிகளையும் மனிதன் உண்டாக்கியிருக்கிறான். எனவே தான், தேவனிடமிருந்து வராத பெயர்களையும், பட்டங்களையும், பதவிகளையும் மனிதன் தரித்துக்கொள்ளுவதை நீங்கள் கவனிக்கலாம். மாறாக, அவர் இவற்றைக் கண்டித்துப் பேசினார்.

### இவைகளில் சிலவற்றை நாம் பார்ப்போம் :

**1."ரெவரெண்ட்" (வணக்கத்திற்குரிய அல்லது அருள்திரு) :** பல மதத்தலைவர்களால் இப்பட்டம் அணிந்து கொள்ளப்படுகிறது. ஆனாலும் இதற்குப் போதிய அழுத்தம் கொடுக்க அவர்களால் இயலவில்லை எனத் தெரிகிறது. எனவேதான், "ரைட் ரெவரெண்ட்" (சரியான வணக்கத்திற்குரிய), "மோஸ்ட் ரெவரெண்ட்" (மிகவும் வணக்கத்திற்குரிய) போன்ற பட்டங்களையும் அவர்கள் வைத்துக் கொள்ளுகின்றனர். இவர்களும், இவர்களை கனம்பண்ணுகிறவர்களும் இந்தப் பட்டங்களால் இவர்களை அழைக்கும் வேளையில், வேதாகமம் முழுவதிலுமாக "ரெவரெண்ட்" என்ற சொல் ஒரே ஒரு தடவை மட்டுமே காணப்படுகிறது என்பதையோ, அச்சொல் தேவனை மட்டுமே குறிக்கிறது என் பதையோ அவர்கள் அறிந்திருக்கவில்லை. தேவனைப் பற்றி பேசும்போது, தாவீது கூறினார்: "...அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங் கரமும் ஆனது" (சங்கீதம் 111:9). இப்போது உங்களிடம் ஒரு கேள்வி: உங்கள் போதகரை "ரெவரெண்ட்" என்று நீங்கள் அழைக்கிறீர்களா? அப்படியானால் அவர் தேவனா? இந்த வார்த்தையை பயன்படுத்தும் ஒவ்வொருவரும் வெட்கப்படவேண்டும். அது தேவனுக்கு மட்டுமே சொந்தமானது. அவரிடமிருந்து அதை எடுத்துப்போட நாம் முயற்சிக்க வேண்டாம்.

**2."பாதர்" (குரு அல்லது தந்தை) :** ஆயிரக்கணக்கான மதத்தலைவர் கள் "பாதர்" அல்லது "தந்தை" என அழைக்கப்படுகின்றனர். "தந்தை" என்று மட்டும் அல்ல, அவர்கள் "பரிசுத்த தந்தை" என்றும் அழைக்கப் படுகின்றனர். இந்தப் பட்டத்தை சுமந்து கொண்டு திரிபவர்களை வேறுவிதமாக அழைத்தால் தங்களை அவமானப்படுத்துவதாக உணருகின்றனர். இவர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்து கூறியதை நினைவில் கொள்ளவேண்டும்: "பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்" (மத்தேயு 23:9). அதேபோன்று "ரபி"

(குரு) அல்லது "எஜமான்" என மனிதர்கள் பயன்படுத்தும் பட்டங்களையும் அவர் கண்டித்தார். தொடர்ந்து அவற்றைப் பயன்படுத்துவது, இக்காரியங்களில் கர்த்தரை பகிரங்கமாகப் பழிப்பதாகும்.

**3."பாஸ்டர்" :** ஒரு குறிப்பிட்ட சபையில் பிரசங்கம் செய்வதைக் குறிக்கும் வகையில், அநேக நாமகரண சபை போதகர்கள் "பாஸ்டர்" என்ற பட்டத்தை பயன்படுத்துகின்றனர். ஆனால் சுவிசேஷத்தில் எந்த இடத்திலும் இந்த அர்த்தத்தில் "பாஸ்டர்" என்ற பட்டம் குறிக்கப்படவில்லை. நாம் "பாஸ்டர்கள்" என பன்மையில்தான் படிக்கிறோம், ஆனால் "பாஸ்டர்" என்று ஒருமையில் அல்ல. மேலும், முதலாவது நூற்றாண்டில் பாஸ்டர்களாக இருந்தவர்கள், 1 தீமோத்தேயு 3ம் அதிகாரத்திலும், தீத்து 1ம் அதிகாரத்திலும் பவுல் குறிப்பிட்டிருக்கும் பல தகுதிகளையும் பெற்றிருந்தபடியால், அப்படிப்பட்ட பட்டத்தைப் பெற்றனர். அவர்கள் பிஷப்கள், மூப்பர்கள், ஆயர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். ஒவ்வொரு பிராந்திய சபையிலும் எப்போதுமே பாஸ்டர்கள் அல்லது பிஷப்கள் என பன்மையில் இருந்தனர். இன்றைய மத உலகில் பயன்படுத்துவது போன்றது சுவிசேஷத்திற்கு மாறானதும், அர்த்தமற்றதுமாகும்.

**4."டாக்டர்" :** கல்வியின் நிமித்தமாக ஒருவர் டாக்டர் பட்டம் பெற்றிருப்பதற்காக, மதப்பட்டத்தைப் போல அவர் அதை உபயோகிக்க வேண்டுமென்று பொருளல்ல. அவ்வாறு உபயோகிப்பது அப்பட்டத்தை தவறாக உபயோகிப்பதாக சுட்டிக்காட்டப்படும். பதவிகளுக்காக அலைவதையும் இயேசு கண்டித்தார் (மத்தேயு 20:25-28).

**5."போப்" :** சுவிசேஷத்தில் காணப்படாத ஒரு பட்டம் இது. ஒரு சாதாரண மனிதன் சபையின் உலகத்தலைவராக தன்னைப் பாவித்துக்கொண்டு, "போப்" என்ற பட்டத்தையும் தரித்துக்கொள்ளுவதை தேவனோ, கிறிஸ்துவோ, சுவிசேஷங்களோ எங்கேயும் கூறவோ, கற்றுக்கொடுக்கவோ இல்லை. இது தேவனிடமிருந்து வந்த காரியமல்ல. கிறிஸ்துவே சபையின் தலைவராக இருக்கிறார் என்று சுவிசேஷங்கள் கூறுகின்றன (கொலோசெயர் 1:18; எபேசியர் 1:22,23). உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு மனிதனை சபையின் தலைவராக ஏற்றுக் கொள்ளுவது கிறிஸ்து உயிரோடு இல்லை, அவர் மரித்துவிட்டார் என்று முடிவு செய்வதாகும்.

மேலே கண்ட பட்டங்கள் மட்டுமல்ல, இன்றும் இதே பட்டியலில் காணப்படும் நூற்றுக்கணக்கான காரியங்களும் சுவிசேஷங்களில் விலக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, தேவமாதா, பாதிரியார், பிஷப், ஆர்ச் பிஷப், தலைவர், பாஸ்டர், இத்தியாதி. இவை தேவனுடைய அதிகாரத்திற்குப் புறம்பாக மதத்திலுள்ள தனிப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் பெயர்களும், பட்டங்களும் ஆகும். மனிதனால் உண்டாக்கப்பட்ட இவைபோன்ற பெயர்களும், பட்டங்களும் தேவனுடைய வசனத்தால் கண்டிக்கப்படுகின்றன. மக்கள் அதை ஏன் கவனிக்க முடியவில்லை? கர்த்தரின் கட்டளைகளை பகிரங்கமாக எதிர்க்க ஒருவர் ஏன் விரும்ப வேண்டும்? அவர்களுடைய அடங்காப்பிடாரித்தனம், கீழ்ப்படியாமை, தற்பெருமை போன்ற பரம்பரை ஆசை இவற்றின் விளைவுதான் என்ற முடிவுக்குத்தான் நாம் வர இயலும்.

மத உலகம் பிரிந்திருப்பது ஏன்? சரி, இதுவும் ஒரு காரணம். ஆனால் ஒற்றுமைக்கு வழி வகுப்பதாக இருப்பின், சராசரி மதத்தலைவர் இந்தப் பட்டங்களை உதறிவிட விரும்புவார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? பெரும்பாலானோர் விரும்பமாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்குப் பெருமை அதிகம். தங்களைத்தாமே அதிகமாக அவர்கள் நேசிக்கின்றனர். இதைப் படிக்கக்கூடிய மதத்தலைவர்கள், சுவிசேஷத்திற்கு எதிரான தங்களுடைய பட்டங்களை மனப்பூர்வமாக உடனே விட்டுவிடுவார்கள் என்னும் கருத்தில் இது எழுதப்படவில்லை; ஏனெனில், ஏறக்குறை ஒருவருக்கும் அந்த எண்ணம் வராது.

மாறாக, தாங்கள் செய்து கொண்டிருக்கும் தவறைப் பற்றி அறியாதவர்கள் தாங்கள் எதைச் செய்கிறார்கள் என்பதை அக்கறையுடன் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவே இது எழுதப்படுகிறது. ஒருவேளை இந்தக் காரியங்களைப் பற்றி எதுவும் எண்ணாமல் நீங்கள் குருட்டுத்தனமாக குருடரைப் பின்பற்றி இப்படியாக தொடக்க முதல் இறுதிவரை சுவிசேஷத்திற்கு விரோதமான பட்டங்களை அணிந்து வாழ்ந்து கொண்டிருக்கலாம். இப்படியாக, உங்களை "ஞானமற்ற சாதாரண மனிதனாக" (LAITY) ஏற்றுக்கொண்டு (மீண்டும் சுவிசேஷத்திற்கு மாறான ஒருபெயர்) "மதத்தலைவர்" (CLERGY) என்னும் மற்றுமொரு வேதத்துக்கு விரோதமான பெயரைத் தரித்துள்ள மனிதனுக்கு, சுவிசேஷத்திற்கு மாறான பல பெயர்களையும், பட்டங்களையும் சூட்டி கனம் செய்கிறீர்கள். நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ அதிலிருந்து விழித்து எழும்படி உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்காக என்னுடைய வார்த்தையை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாம்; ஆனால் வேதாகமத்திற்குச் செல்லுங்கள். அங்கே "ரெவரெண்ட் பேதுரு, டாக்டர் பவுல், பாஸ்டர் யோவான், அறிவர் அந்தோனி" இப்படியாக நீங்கள் காணமுடிகிறதா? எனப்பாருங்கள். நற்செய்தியைப் போதிக்கும் ஒருவர் எப்போதாவது "தந்தை" "போப்" என்று அழைக்கப்பட்டதாக நீங்கள் படிக்க முடிகிறதா? அங்கத்தினர்கள் "ஞானமற்ற சதாரண மக்கள்" (Laity) என்றும், பிரசங்கிமார்கள் "மதத்தலைவர்கள்" (Clergy) என்றும் எப்போதாவது அழைக்கப்பட்டனரா? என்று சுவிசேஷத்திற்குச் சென்று பாருங்கள். அப்படி நீங்கள் பார்த்தால் உண்மையைக் கண்டுபிடிப்பீர்கள்.

அப்படியானால், மதத்தலைவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்? பிரசங்கிமார், கற்பிக்கிறவர்கள், போதகர்கள், மூப்பர்கள், கிறிஸ்தவர்கள், சகோதரர்கள் என அழைக்கப்பட்டனர். கர்த்தருடைய சபையானது கிறிஸ்துவின் பெயரைத் தரித்திருந்தது. சுவிசேஷத்தின்படியாக நாம் இருக்க முடியும்போது, அதற்கு மாறாக நாம் இருக்க வேண்டாம். சத்தியத்தை நாம் பின்பற்ற முடியும்போது, தவறைப் பின்பற்ற வேண்டாம். கர்த்தர் நமக்குத் தந்த பெயர்களையும், பட்டங்களையும் மட்டுமே நாம் பயன்படுத்துவோம். அப்படிச் செய்யும்போது மாத்திரமே நாம் சரியாக இருக்க முடியும்.

J.C. CHOATE

தமிழில்: எஸ்.எஸ்.ராஜன்.

# "புதிய விருந்தாளி"



சில மாதங்களுக்கு முன்பு நான் பிறந்தேன். என் தந்தை ஒரு புதிய நபரை சந்தித்தார். அவர் எங்கள் சிறிய நகரத்திற்கு புதியவராய் வந்திருந்தார். ஆரம்பத்திலிருந்தே இவரால் என் தந்தை கவரப்பட்டு, பதிலாய், சீக்கிரமே அவரை எங்கள் குடும்பத்தோடு வாழ வரவேற்று அழைத்து வந்தார். புதியவர் அதை ஏற்று வந்து சில மாதங்களுக்குள் என்னை உலகத்துக்குள் அழைத்துச் சென்றார்.

நான் வளர்ந்த பிறகு எங்கள் குடும்பத்தில் ஒருவராயிருக்கும் அவரைப் பற்றி கேள்வி கேட்கவேயில்லை. எங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பங்கு உண்டு. என் அண்ணன் டேவிட் 5 ஆண்டுகள் எனக்கு மூத்தவன். சாரா என்னுடைய இளைய சகோதரி. இவன் என்னுடன் விளையாடுவான். என் பெற்றோர்கள் எனக்கு நல்ல வழிகாட்டுவார்கள். அம்மா, தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொடுப்பார்கள். அப்பா தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய எனக்கு கற்றுக்கொடுப்பார்கள்.

ஆனால் இந்த 'புதியவர்' கதை சொல்வார். சில கவர்ச்சியான கதைகளை தன் மூலம் சொல்லுவார். அனுபவங்கள், புதினங்கள், சிரிப்புக்கதைகள் என்று சொல்லி, மாலைநேரத்தில் எங்கள் குடும்பம் முழுவதையும் தன்னிடம் ஈர்த்துவிடுவார் மணிக்கணக்காக.

அரசியல், வரலாறு, அறிவியலைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டுமானால் அவரிடம் தெரிந்துகொள்ளலாம். எல்லாம் அவருக்குத் தெரியும். இவருக்கு கடந்த கால நிகழ்ச்சிகள் தெரியும். நிகழ்காலத்தை புரிந்துகொண்டவர். எதிர்காலத்தைப் பற்றி முன்கூட்டியே சொல்ல இவரால் முடியும். இவர் படங்களை வரைந்தால் சரியாக உயிரோட்டமுள்ளதாக வரைவார்.

இவர் முழுக்குடும்பத்திற்கும் நல்ல நண்பராகிவிட்டார். இவர், டேவிட்டையும், அப்பாவையும், என்னையும் முதல் பேஸ்பால் விக் போட்டிகளுக்கு அழைத்துச்செல்வார். இவர் எப்பொழுதும் எங்களை சினிமா பார்க்க உற்சாகப்படுத்திக் கொண்டேயிருந்தார். இவர், சினிமா நட்சத்திரங்கள் அநேகரை எங்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். என் சகோதரருக்கும் எனக்கும் இந்த நட்சத்திரங்கள் பெரிதும் ஒரு மனமகிழ்ச்சியை ஏற்படுத்தினர்.

இந்தப் புதியவர் ஓயாமல் பேசிக்கொண்டேயிருப்பார். அப்பா இதை பொருட்படுத்தவேயில்லை. சில வேளைகளில் அம்மா மெதுவாக எழுந்து பக்கத்து அறைக்குள் போய் தன் வேதாகமத்தை வாசித்து ஜெபிப்பதைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன். எப்படி வீட்டில் ஒரு புதியவர் இருக்கும்போதே அம்மா ஜெபிக்கிறார்கள்?

அப்பா சில ஒழுக்கநெறிகளை எங்கள் குடும்பத்திற்கு கொடுத்திருக்கிறார். ஆனால் இந்த புதியவர் அதைப் பொருட்படுத்துவதே இல்லை. வயது வந்தவர்களுக்கு மட்டுமே என்பதை இவர் எல்லோருக்கும் சொல்லிவிடுகிறார். அப்பா தேநீரை மட்டுமே

அருந்துவார். ஆனால் இவர் மதுபானங்களைப் பற்றியெல்லாம் பேசி மனதை கெடுக்கப் பார்க்கிறார்.

இவர் 'செக்ஸ்' பற்றியும் கூசாமல் பேசுகிறார். இவருடைய வார்த்தைகளை சில சமயங்களில் வெட்கமேயில்லாமல் வெளிவருவதைப் பார்க்கும்போது எனக்கே இந்த புதியவரைப் பற்றி சங்கடம் ஏற்படுகிறது.

சபை, ஞாயிறு பாடவகுப்பு இவைகளை விட்டு இந்த புதியவர் எங்களை ஏமாற்றிவிடுகிறார். பரிசுத்த வேதாகமத்தில் ஒழுக்க மதிப்பீட்டை இவர் சீர்குலைத்துக் கொண்டேயிருக்கிறார். ஆனால் யாருமே இதைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதுமில்லை. இவரை வீட்டை விட்டு துரத்தவும் விரும்பவில்லை.

முப்பது வருடங்கள் கடந்துவிட்டது இந்த புதியவர் எங்கள் குடும்பத்திற்குள் நுழைந்து. உண்மையாக சொல்லுகிறேன், இந்த புதியவரைப் போலவே ஒருவரை என் வீட்டிலும் அழைத்து வந்து வைத்திருக்கிறேன். இந்த இருவரும் என் பெற்றோர் வீட்டிலும் அமர்ந்திருக்கிறார்கள், என் வீட்டிலும் அமர்ந்திருக்கிறார்கள். அவர் பேசுவதை கேட்கவும், பார்க்கவும் இவர் பொறுமையோடு மணிக்கணக்காக காத்திருக்கிறார்.

இந்த 'புதியவர்' பெயர் ..................

நாம் பெரும்பாலும் இவருடைய இன்சியல் கொண்டுதான் அழைப்போம் - T.V.

*- Selected*

*(Voice of Truth)*

*தமிழில்: வேதானியேல் துரைராஜன்*

## இம்மாத வேத அறிவுப் போட்டி

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு வேதத்திலிருந்து விடைமட்டும் எழுதி இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பி வைக்கவும்.

1. நியாயத்தை நஞ்சாகவும், நீதியின் கனியை எட்டியாகவும் மாற்றின வம்சத்தார் யார்?
2. அது உன்பாடு என்று யாரைப் பார்த்துச் சொன்னார்கள்?
3. எதினாலும், எதினாலும் பாவம் நிவர்த்தியாகும்?
4. தூங்குகிற நீ விழித்து, யாரை விட்டு எழுந்திரு?
5. வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் எப்படிப்பட்டது?
6. பவுலுக்கு கொடுக்கல் வாங்கல் காரியத்தில் உடன்பட்ட சபை எது?
7. அநியாயஞ்செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான்; என்ன இல்லை?
8. நீதியாகிய கனியானது எவர்களாலே, எதிலே விதைக்கப்படுகிறது?
9. விசுவாசத்தினால் வராத யாவும் எப்படிப்பட்டது?
10. தன் மனைவி தூண்டிவிட்டபடியே, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய தன்னை விற்றுப்போட்டவன் யார்?

"உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்" - மத்தேயு 5:37.

சிறுவர் பகுதி



# மனந்திரும்பிய மைந்தன்

*வேதபகுதி : லூக்கா 15:11–32*

ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தன் தகப்பனிடம் ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கைப் பிரித்துக் கொடு என்றான். அப்படியே அவனது தகப்பன் ஆஸ்தியை பங்கிட்டுக் கொடுத்தான். வாங்கிய பங்கை இளைய மகன் என்ன செய்தான் தெரியுமா? பட்டணத்திற்குக் கொண்டு சென்று, உல்லாசமாய் வாழ்ந்து செலவு செய்துவிட்டான். அந்த தேசத்தில் கொடிய பஞ்சம் வேறு அதிகரித்தது. அப்பொழுது அவனிடம் ஒன்றுமில்லாமல் கஷ்டப்பட்டான். உடனே ஒரு யோசனை வந்தது. ஒரு முதலாளியிடம் வேலைக்குச் சேர்ந்தான். என்ன வேலை தெரியுமா? கணக்குப்பிள்ளை வேலைன்னு நினைச்சேங்களா!. அப்படி ஒன்னுமில்லை. பன்றி மேய்க்கிற வேலைதான் அது. எவ்வளவு அருவருப்பான வேலை பார்த்தீங்களா? வேறே வழியே இல்லை. ஆகவே அந்த வேலையைச் செய்தான். அவனுக்கோ அகோரபசி. பன்றி தின்னும் தவிடாவது கிடைக்குமானு பார்த்தான். அதுவும் கிடைக்கல. அப்பத்தான் அவனுக்குப் புத்திவந்தது.

என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்கு பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது. நானோ, பசியினால் சாகிறேன் என்று நினைத்தான். அப்புறம் நான் என் தகப்பனிடம், தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு விரோதமாகவும் பாவம் செய்தேன் இனிமேல் உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி தகப்பனை சந்திக்கப் புறப்பட்டான். தகப்பனோ அவன் தூரத்தில் வரும்போதே ஓட்டமாய் ஓடி, என் மகனே என்று சொல்லி முத்தமிட்டான். அதுமட்டுமா, உடனே ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்த, அவனுக்குப் புத்தாடை உடுத்தி, புது செருப்பு வாங்கிக் கொடுத்து, கைக்கு மோதிரம் போட்டு மிகுந்த சந்தோஷமடைந்தார்கள்.

அந்த சமயத்தில் மூத்த மகன் வயலிலிருந்து வீட்டுக்கு வந்தான். என்னவென்று விசாரித்தான். நடந்ததை சொன்னார்கள். உடனே அவனுக்கு கோபம் வந்து வெளியே நின்றுவிட்டான். இதையறிந்த அவன் தகப்பன் மகனே, நீ எப்பொழுதும் என்னோடே இருக்கிறாய். எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது. உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிரடைந்தான். காணாமல் போனான், திரும்பவும் காணப்பட்டான். ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் என்றான். தம்பி, தங்கைகளே, அப்பா, அம்மாவிடம் எனக்கு அதுவேணும், இதுவேணும் என்று சொல்லி அடம்பிடிக்கக் கூடாது. அவங்களா பார்த்து உனக்கு வாங்கிக் கொடுத்தால் வாங்கிக்கொள்ள வேண்டும். தப்பு செய்துவிட்டால் உடனே அப்பா, அம்மாவிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். அதுதான் நமதாண்டவருக்குப் பிடிக்கும்.

மனப்பாட வசனம் : "மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்கா 15:7).

பெண்கள்பகுதி



## துன்பத்தையும் இன்பத்தையும் கண்ட ஸ்திரீ

## The Woman who went through Shadow and Sunshine

அன்பான சகோதரிகளே, நம்முடைய வாழ்வில் பலவிதமான சூழ்நிலையின் மத்தியிலிருந்து ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்கலாம். எது எப்படியிருந்தாலும் இப்போது கிறிஸ்தவர்கள் என அழைக்கப்படுகிற நாம் ஏதோ தலைவலிக்காக ஒரு மாத்திரை எடுத்துக்கொள்வது போல இயேசுவை நம் வாழ்வில் கொண்டிருப் போமானால் மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம். இங்கு துன்பத்தையும், இன்பத்தையும் அனுபவித்த ஒரு ஸ்திரீ நமக்கு ஒரு பாடமாக அமைவதைப் பார்ப்போம்.

இவள் சீதோனுக்கடுத்த சாறிபாத் என்னும் ஊரைச் சேர்ந்த விதவை. தன் கணவனை இழந்த துக்கம் ஒருபுறம், தேசத்தில் மழையில்லாததால் ஏற்பட்ட பஞ்சத்தின் கொடுமை ஒருபுறம். தேவனை அறியாத அஞ்ஞான ஸ்திரீயாகிய இவள் துக்கத்தின் மிகுதியால் தானும், தன் குமாரனும் ஜீவனை விட முடிவுசெய்த அந்நேரத்திலே தேவனுடைய அநுக்கிரகம் அவளுக்கு உண்டாயிற்று. ஆம், தேவன் தன்னுடைய தீர்க்கதரிசியாகிய எலியாவை அவளிடத்தில் அனுப்புகிறார். தேவன் தம்மால் உண்டாக்கப்பட்ட மக்கள்மேல் கொண்டுள்ள அன்புதான் எவ்வளவு பெரியது! ஒருவனும் கெட்டுப்போவது அவரது சித்தமல்லவே.

எலியா, விறகு பொறுக்கிக்கொண்டிருந்த இந்த விதவையைப் பார்த்துக் கூப்பிட்டு, "... நான் குடிக்கிறதற்குக் கொஞ்சம் தண்ணீர் ஒரு பாத்திரத்தில் எனக்குக் கொண்டுவா என்றான். கொண்டுவர அவள் போகிறபோது அவன் அவளை நோக்கிக் கூப்பிட்டு, கொஞ்சமும் அப்பமும் கொண்டுவா என்றான்" (1 இராஜா.17:10). இருக்கிறதை உண்டு ஜீவனை விட நினைத்த இந்த ஸ்திரீயினிடத்தில் ஒரு தேவ ஊழியன் அப்பம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டால் அவளது மனநிலை எப்படியிருந்திருக்கும். யோசித்துப் பாருங்கள்! "அதற்கு அவள்: பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல், என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள்" *(1 இராஜா.17:12)*. ஆனாலும் எலியா அவளை விட்டபாடில்லை. "... பயப்படாதே/ நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து; ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய

அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம்" *(1 இராஜா.17:13)* என்றான். அன்பான சகோதரிகளே, நாம் இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் இருப்போமானால் என்ன சொல்வோம் என்பதை சிந்திப்போம்!

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மத்தேயு 6:33ல் ஒரு அருமையான ஆலோசனை கூறுகிறார். அதாவது, "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவையெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும்" என்கிறார். ஆம், நம் ஆண்டவர் நம்மிடத்தில் எதிர்பார்ப்பது இதுவே. மேற்கண்ட அந்நியஸ்திரீ தன் வறுமையிலும், தன் இயலாமையிலும் தேவமனுஷன் சொற்படி செய்தாள். ". . . அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள். கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை" *(1 இராஜா.17:15,16).*

ஏனோதானோவென்ற ஒரு கிறிஸ்தவ ஜீவியத்தைச் செய்து கொண்டு கர்த்தர் எனக்கு இதைச் செய்யவில்லையே, அதைச் செய்யவில்லையே என்போமானால் நிச்சயம் தேவ ஒத்தாசை நமக்குக் கிடைக்காது. இவ்வுலகத்தின் காரியங்கள் ஒருவரையும் நித்தியஜீவனுக்கு நேராய் நடத்திக்கொண்டு செல்ல முடியாது. ஒருவேளை இம்மைக்காக மாத்திரம் தேவனைப் பற்றிக் கொண்டிருப்போமானால், எல்லாரைப் பார்க்கிலும் மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம் என வேதம் கூறுகிறது. எனவே முதலாவது தேவன் சொற்படி நடப்போம். அப்பொழுது இம்மைக்குரிய ஆசீர்வாதத்யையும், மறுமைக்குரிய ஆசீர்வாதத்தையும் பெறுவோம்.

தேவ மனுஷனின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்த சாறிபாத் ஸ்திரீ தொடர்ந்து ஆசீர்வாதத்தைப் பெற்றவளாய் தேவன் உண்மையுள்ளவர் என்று கண்டுகொண்டாள். "நீர் தேவனுடைய மனுஷன் என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்றும், இதினால் இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றாள்" *(1 இராஜா.17:24).* இவளைக் குறித்து இயேசு தாமே லூக்கா 4:25,26ல் சாட்சி கூறுகிறார். ஆம் சகோதரிகளே, நாமும் இவளைப் போல் கர்த்தர் உண்மையுள்ளவர் என்றும், அவரது வார்த்தைகள் உண்மையுள்ளதென்றும் கூறி அவரது காரியங்களுக்கு முதலிடம் கொடுத்து அவர் சொற்படி நடப்போம். நம் துன்பங்களைக் கண்டு துவளாமல் ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தேவ ஆசீர்வாதம் பெறுவோம். நம் துக்கம் இன்பமாய் மாறும். கர்த்தர் தாமே நம்மை ஸ்திரப்படுத்துவாராக!

- J. Glory Arujunan



# WHO AM I?

## நான் யார்?

1. யோயாக்கீம் அரசாண்ட காலத்தில் யூதேயாவில் பிறந்தவன் நான்,
2. நான் அடிமையாக இருந்தபோதிலும் நான்கு ராஜாக்களுக்கு ஆலோசகனாக இருந்தேன்.
3. நான் அழகானவனாகவும், சகல ஞானத்திலும் தேறினவனாகவும், அறிவில் சிறந்தவனாகவும், கல்வி நிபுணனாகவும், ராஜாவின் அரமனையிலே சேவிக்கத் திறமையுள்ளவனாகவும் வர்ணிக்கப்பட்டதுடன் கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக்கொள்ளவும் கட்டளை பெற்றேன்.
4. நான் மீஷகாவேல் என்ற நண்பன் ஒருவனைப் பெற்றிருந்தேன்.
5. நான் மனமேட்டிமை கொண்ட ஒரு ராஜாவை சேவித்தேன். அவனது மனமேட்டிமையினிமித்தம் தேவன் அவனை வெளியின் மிருகத்தைப்போல் சிலகாலம் இருக்கும்படி செய்து அவனுக்குத் தாழ்மையைக் கற்பித்தார். இந்த தண்டனையின் முடிவில் ராஜா புத்தியடைந்து கர்த்தருடைய மகத்துவத்தையும், கர்த்தர் ஒருவரே கர்த்தர் என்பதையும் எல்லோருக்கும் எழுதி அனுப்பினான்.
6. அரண்மனையில் மற்றவர்கள் எல்லாரும் என்மேல் பொறாமை கொண்டனர்.
7. நான் தினம் மூன்று வேளையும் எருசலேமை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டு வந்தேன்.
8. உலகத்தின் முடிவு காலத்துக்கடுத்த காரியங்களைப் பற்றிய நான்கு பெரிய மிருகங்களின் தரிசனத்தை தேவன் எனக்குக் காண்பித்தார்.
9. நான் ஒரு தரிசனம் கண்டேன். இதோ "முந்தின நாட்களையும், மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவரையும், அவரது ராஜரீகம் வருவதையும் கண்டேன்."
10. நான் ஒரு இராமுழுவதும் சிங்கங்களின் கெபியிலே கிடந்தேன்.

- Selected From Voice of Truth (Volume 10).

விடை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

## எவ்வாறு தேவனை ஒழுங்காக ஆராதிப்பது?
### (யோவான் 4:23-24)




1. இதயப்பூர்வமாக, சத்தியத்தின்படி ஆராதிக்க வேண்டும் (யோவான் 4:24).

A. சத்தியத்தின் மொத்த தொகுப்பே புதிய ஏற்பாடாகும் (யோவான் 1:17; 2 பேதுரு 1:3; எபிரெயர் 1:1).

1. ஆராதனையை குறித்து அது என்ன போதிக்கிறது?

B. பிராந்திய சபை, வாரத்தின் முதல் நாளாம் ஞாயிற்றுக்கிழமையில் ஒரு இடத்தில் கூடிவர வேண்டும் (1கொரிந்தியர் 16:1,2; அப்போஸ்தலர் 20:7).

1. கூடி வரும் பொழுது செய்ய வேண்டிய காரியங்கள் :

a. ஜெபித்தல் - (1கொரி.14:15,16; எபிரெயர் 13:15)

b. பாடுதல் - (1கொரி.14:15,16; எபிரெயர் 13:15)

c. வசனத்தை போதித்தல் - (எபிரெயர் 13:15 மற்றும் 2 தீமோ.4:1-5; அப்போ. 20:7-ஐப் படிக்கவும்)

d கர்த்தர் பந்தியில் கலந்து கொள்ளுதல் - (இராப்போஜனம்) எபிரெயர் 10:24-30; அப்போஸ்தலர் 20:7; 1கொரி.11:23-30; 1கொரி.10:16-17; யோவான் 6:53-54 மற்றும் மத்தேயு 26:26-29ஐப் படிக்கவும்.)

e. சபைக்கு உங்கள் காணிக்கையை கொடுத்தல் :

(1கொரி.16:1,2; 2கொரி. 9:6-12)

உதாரணம் : 2 கொரி. 8:1-9

ஆராதனையில் இதுவும் முக்கிய அம்சம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும்.

f எல்லா சமயங்களிலும் தேவனை ஆராதிக்கும் மனப்பான்மை , ஆவி இருக்கவேண்டும் (ரோமர் 12:1)

DON NORWOOD

தமிழில் : பி.ஆர்.சாமி

**WORD OF CHRIST**
**MONTHLY MAGAZINE**
Regd. No. 84661 - 92
Postal Regn.No.TN/DDL/19

**Edited by B.Arjunan on behalf of Church of Christ**
2.2.102-D/5 Rajan Nagar
*Batlagundu and Printed at Novelty Press for Shanthi Printers*
**BATLAGUNDU - 624 202.**

இவ்விதழ் தேவைக்கு
இன்றே தொடர்பு
கொள்ளவும்

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன்
அழைக்கின்றோம்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.00 | மணி |
| வியாழன் | மாலை | 6.45 | மணி |



**கிறிஸ்துவின் சபை**
*2.2.102–D/5 ராஜன்நகர்*
வத்தலக்குண்டு - 624 202
திண்டுக்கல் மாவட்டம்.
Phone: (04543) 23278

To

From
WORD OF CHRIST
*POST BOX NO.5*
BATLAGUNDU - 624 202
*S.INDIA.*